<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,ARAKKONAM, RANIPET DISTRICT.</u>

<u>PAGE NO.05/2013</u>

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII of Criminal Procedure)

| | | | | |
|---|---|---|---|---|
| Calender | : | CC.231/2012 | | |
| Miscellaneous | : | | | |
| Preliminary Register | : | | | |
| Sessions | : | | | |
| Deposition of witness for | : | Prosecution | : | PW-7 |
| | | Defence | : | |
| | | Court | : | |
| Name | : | Venkatesan | | |
| Father's Name | : | Kalappan | | |
| Village | : | Kattupakkam | | |
| Taluk | : | Arakkonam | | |
| Caste | : | - | | |
| Calling | : | Cooli | | |
| Religion | : | Hindu | | |
| Age | : | 47 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.12.2020

*மு.வி.சத்தியப்பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.*

*சாட்சி இராணியம்மாள் என்னுடன் பயணம் செய்தவர். சாட்சி பிரதாப்-பை தெரியும். இந்த விபத்தில் பலத்த காயமடைந்தவர். 31.10.2007 அன்று காலை 6 3/4 மணிக்கு டி.என்.20 சி 5676 என்ற மினி வேனில் நான் பயணம் செய்துக் கொண்டிருந்தேன். அந்த வண்டியில் சுமார் 25 பேர் என்னுடன் பயணம் செய்தார்கள். மேற்படி நபர்களில் பிரதாப் என்னுடன் பயணம் செய்தார். வண்டியின் ஓட்டுநர் பெயர் ஏழுமலை, அவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் காட்டுப்பாக்கம் தான். பார்த்தால் அடையாளம் காட்டமுடியும். வண்டி அதிவேகமாக சென்றுக் கொண்டிருந்தது. வண்ணார்மேடு டர்னிங்கிக்கு கொஞ்சம் முன்னாடி கட் செய்யும் போது வண்டி 3 முறை புரண்டு கவிழ்ந்தது. எனக்கு அந்த விபத்தில் அடிப்பட்டது, தலை, கால், கை மற்றும் உடம்பின்*

பல்வேறு இடங்களில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. அங்கிருந்தவர்கள் என்னை அரக்கோணம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். விபத்து ஏற்பட்டதற்கு காரணம் ஓட்டுநர் தான், அதிவேகமாக வந்ததால் வண்டி கவிழ்ந்தது. ராணியம்மாள் இறந்துவிட்டதாக பிறகு கேள்விப்பட்டேன். எனது வீட்டுக்கார அம்மா சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். எதிரியை அடையாளம் காட்ட வேண்டி வழக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.